# கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலய 130வது ஆண்டு நிறைவு விழா

## நன்றியுரை – பஸ்ரியாம்பிள்ளை அஞ்சலோ




கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்தின் 130ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பிக்க வருகை தந்துள்ள திருநிலையினர் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் நன்றியுடன் வரவேற்கின்றோம்.

யாழ் மறை மாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களே! தீவக மறைக்கோட்ட முதல்வர் அருட்பணி ம. டேவிற் அடிகளார் அவர்களே! எமது பங்குத்தந்தை அருட்பணி பத்திநாதன் அவர்களே! கியூடெக் கரித்தாஸ் இயக்குனர் அருட்பணி யூஜின் அடிகளார் அவர்களே! புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளர் அருட்பணி எயின்சிலி றொஷான் அடிகளார் அவர்களே! எமது கரம்பொன் மண்ணின் மைந்தர்களான அருட்பணி சகாயநாயகம், அருட்பணி ஜெறோசெல்வநாயகம், அருட்பணி லியோ ஆம்ஸ்ரோங், அருட்பணி றோய் பேடினன், அருட்பணி மைக்கல் சவுந்தரநாயகம் அடிகளார்களே! இப்பங்கில் பணியாற்றிய அருட்தந்தையர்களே! அருட்சகோதரிகளே! பங்கு மக்களே அனைவருக்கும் நன்றி கலந்த வணக்கங்களை கூறி மகிழ்கின்றேன்.

எமது புனித செபஸ்தியார் ஆலயம் 130 அகவையில் காலடி பதித்திருக்கும் இவ்வேளையில் இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கும் மற்றும் பங்கின் வளர்ச்சிக்கும் எமது விசுவாச வாழ்விற்கும் வழிகாட்டி அயராது உழைத்த அருட்தந்தையர்களை இவ்விடத்தில் நினைவு கூர்கின்றோம்.

1990ம் ஆண்டு ஆவணி இடப்பெயர்வின் போது பங்குத்தந்தையாக அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் பணியாற்றினார். மீள் குடியமர்வின் பின் 1996 தொடக்கம் 2001 வரை

நிரந்தர பங்குத்தந்தை இன்மையால் ஊர்காவற்றுறை பங்குத்தந்தையாக பணியாற்றிய அருட்பணி அன்ரனிபாலா அடிகளார் மற்றும் அருட்பணி ஞானப்பிரகாசம் அடிகளார் திருப்பலி ஒப்புக்கொடுத்து வந்தனர். 2002 தொடக்கம் 2008 வரையான காலப்பகுதியில் அருட்பணி யேசுதாசஸ் அடிகளார் புனித அந்தோனியார் கல்லூரியின் அதிபராகவும் எமது ஆலய பங்குத்தந்தையாகவும் பணியாற்றினார் அவருக்கு உதவியாக அருட்பணி சோபன் அடிகளார் பணியாற்றினார். ஆலய பங்குச்சபையும் ஆரம்பிக்கப்பட்டது.

இக்காலப்பகுதியில் இறைபதம் அடைந்த அதிபர் இரட்ணராஜா அவர்களினால் ஆலய பராமரிப்பு வேலைகள் இடம்பெற்றன. இடம்பெயர்வுக்கு முன்பும் மீள் குடி அமர்வின் பின்பும் 2004 வரை அமரர் இரட்ணராஜா அவர்கள் அருகில் உள்ள தனது இல்லத்தில் இருந்தவாறே ஆலயப் பணிகளைச் செய்தார். அவரின் இழப்பு கரம்பொன் பங்கிற்கே பேரிழப்பாகும் என்பதை இவ்விடத்தில் குறிப்பிட்டு அவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக பிரார்த்திக்கின்றோம்.

2008ம் ஆண்டு பங்குத்தந்தையாக பொறுப்பேற்ற அருட்பணி கிறிஸ்தோப்பர் அடிகளார் குருமனை, ஆலய முன்பள்ளி மற்றும் ஆலய பராமரிப்பு என்பவற்றிற்கு நிதி வசதி வாய்ப்புக்கள் இல்லை என்பதை தெரிவித்து பங்குச் சபை செயலாளர் ஆசிரியர் நவராஜா மூலமாக கொழும்பில் இருந்த என்னுடன் தொடர்பு கொண்டார் அவ்வேளை கொழும்பில் இவ்வாலய பங்கைச் சார்ந்த 30 குடும்பங்களை ஒன்று கூட்டி அருட்பணி கிறிஸ்தோப்பர் அடிகளாரின் தலைமையில் வெள்ளவத்தையில் அமைந்திருந்த திரு. டேவிற் அவர்களது இல்லத்தில் கூட்டம் ஒன்று இடம்பெற்றது அதில் ஆலயத்திற்கு நிதியுதவி செய்ய தீர்மானிக்கப்பட்டது. கடந்த 10 வருடங்களாக 2010 இருந்து இக்குழு இயங்கி வருகின்றது. குருமனைத் திருத்தம், முன்பள்ளி மற்றும் ஆலய பராமரிப்பு என பல வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன இவையனைத்தும் அருட்பணி கிறிஸ்தோப்பர் அடிகளார் மற்றும் அருட்பணி மரியதாஸ் அடிகளார் என்போரின் காலத்தில் இடம் பெற்றன.

இத்தனைக்கும் மத்தியில் ஆலய உட்புற கட்டடம், டோம் பகுதி என்பவற்றில் திருத்த வேலைகள் மேற்கொள்ள வேண்டிய தேவையிருந்தது. ஆலய பங்குச் சபை பங்குத்தந்தையூடாக ஆயரின் அனுமதி பெற்று புலம்பெயர் பங்குமக்களிடமிருந்து உதவி பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. கனடாவில் இப்பங்கு மக்கள் அதிகம் இருப்பதால் முதலில் அவர்களிடம் உதவி கோரப்பட்டது. Karampon St. Sebastian Parishioners – Canada என்ற அமைப்பொன்று உள்ளது. ஆலய புனரமைப்புக்கு நிதிப்பங்களிப்பு செய்வதாக அவர்களால் உறுதியளிக்கப்பட்டது. இதனை அறிந்த இப்பங்கைச் சேர்ந்த அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்தில் வாழும் மக்களும், தனிப்பட்டவர்களும் உதவி செய்ய முன்வந்தனர். இவர்கள் அனைவருடைய கூட்டு முயற்சியினால் இவ்வாலயம் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. ஆலய புனரமைப்பிற்கு உதவிய அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றோம்.

இன்றைய நாளில் இவ்வாலயத்தின் 130வது ஆண்டு நினைவுத்திருப்பலியை தலைமை தாங்கி நிறைவேற்றி எமக்கெல்லாம் ஆசீர் வழங்கிய எமது மறை மாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகைக்கு பங்குமக்கள் சார்பாக எமது நன்றிகளை தெரிவித்து நிற்கின்றோம்.

இந்நிகழ்விற்கு வருகை தந்த திரு நிலையினர் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். இத்தனை சிறப்பிற்கும் முன்னிலையில் நின்று உழைத்த எமது வாலிபர்களுக்கும், பங்குத்தந்தை, ஆலய பங்குச் சபை, மற்றும் உதவிக்கரம் நீட்டிய அத்தனை உள்ளங்களிற்கும் எமது நன்றிகள்.